# பத்தாம் வகுப்பு தமிழ் – விரிவானம்

www.Padasalai.Net

## 1.உரைநடையின் அணிகலன்கள்

- உரைநடையிலும் உவமை உருவகம்.
- உரைநடையிலும் உவமை உருவகம் இடம் பெற்றுத் தமிழுக்குச் சிறப்புச் செய்கின்றன.
- குறிஞ்சி மலரில் நா.பார்த்தசாரதி , உவமையை கையாளுகிறார். இயற்கை பதித்த

  இரண்டு பெரிய நிலைக்காண்ணாடிகளைப்போல இரு புறம் இரு கண்மைகள் என வர்ணகிறார் எனவும்

- களம்புகத் துடித்து நின்ற உணக்கு வெற்றிச்சாறு கிடைத்துவிட்டது என்று அறிஞர் அண்ணா உருவகத்தைப் பயன்படுத்தி உணர்வை தூண்டுகிறார்.

**அஃறிணை உயர்திணையால் உலா வருதல்.**

- தமிழ்தென்றல் திரு.வி.க. சோலையில் புகுவேன் மரங்கள் கூப்பிடும் விருந்து வைக்கும்.

**எதுகையும் மோனையும் இழையோடி உரைநடை.**

- ர.பி.சேதுப்பிள்ளை தமிழ் இன்பத்தின்

**சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் நடை.**

டாக்டர்.மு.வ. தமிழ் நடை

சொல்முரணிலும் மெய்ம்மையைக் காட்டும் நடை.

தோழர்.ப.ஜீவானந்தம் அவர்களின் நடை

## 2.புயலிலே ஒரு தோணி ப. சிங்காரம்

- புலம்பெயர்ந்த தமிழர்கள் பற்றிய முதல் புதினம் ஆகும்.
- இதன் ஆசிரியர் ப. சிங்காரம் ஆவார்.
- கடல் பயணம் கடும்பயணம் என்பதை விளக்கும் கதை
- இயற்கையில் மாற்றம் - பயணத்தில் தடுமாற்றம்
- இந்தோனேசிய கடற்பயண அனுபவமே புயலிலே ஒரு தோணி புதினத்தின் கதை ஆகும்.
- தோணி கடும்பாதிப்புக்கு உள்ளாகியது
- கடல்நீர் நடுவே பயணம் செய்வோர் முடிவு என்னவாக இருக்கும் ? யாராலும் சொல்லமுடியாது. ஒவ்வொரு நாளும் துயரம் நிறைந்தது என்பதை உணர்த்துகிறது புயலிலே ஒரு தோணியின் கதை.

### புயலிலே ஒரு தோணி (வர்ணனைகளும் ஒலி குறிப்புகளும்)

- வருணனைகள்
  - கொளுத்திய வெயில் இமைப் பொழுதில் மறைந்து விட்டது. வானம் உடைந்து கொட்டு கொட்டென்று வெள்ளம் கொட்டியது.
  - வானுடன் கடல் கலந்துவிட்டது.
  - மழைதெரியவில்லை காற்றுடன் இணைந்துவிட்டது.
  - தோனி அப்படியும் இப்படியுமாய்த் தாவிக் குதித்து விழுந்து திணறுகிறது.
- அடுக்குத் தொடர்,

இருட்டு இருட்டு கும்மிருட்டு

- கரை கரை கரை
- ஒலிக்குறிப்பு சொல்
- சிலு சிலு மரமரப்பு
- கிறு கிறுத்துக் கூத்தாடியது
- நொறு நொறு என்று நொறுங்கியது

❖ நொய்ங், புய்ங், நொய்ங்



### 3.கோபல்லபுரத்து மக்கள்

- கோபல்லபுரத்து மக்கள் புதினத்தின் ஆசிரியர் கி. ராஜநாராயணன் -இவர் கரிசல் எழுத்தாளர் - 1994-ல் சாகித்ய அகாதெமி விருதைப் பெற்றவர்.
- கிராமத்து வெள்ளந்தி மனிதர்கள் காட்டும் விருந்தோம்பல் பற்றியது இப்புதினம்.
- பசித்த வேளையில் வந்தவர்களுக்குத் தம்மிடம் இருப்பதைப் பகிர்ந்து கொடுக்கிற நேயத்தைப் பேசுகிறது இக்கதை.
- இக்கதையில் வரும் அன்னமையா பெயருக்கு ஏற்ப, பசியோடு வந்த முன்பின் தெரியாத வாலிபனின் பசியைப் போக்க, தன் வயலில் இருந்து கஞ்சியை உரிமையோடு கொடுத்து பசியாற்றினார்.
- அன்னமையா என்னும் அவருடைய பெயருக்கேற்ப, செயலும் அமைந்துள்ளது.
- அவருடைய பெயரை மனத்திற்குள் மீண்டும் சொல்லி மகிழ்ந்தான் அந்த இளைஞன்.
- தமிழர் பண்பாடாகிய விருந்தோம்பலை இன்றும் காத்து வருபவர்கள் கிராமத்து மக்களே என்பதை உணர்த்துகிறது இக்கதை.

### 4.புதிய நம்பிக்கை

கமலாலயன்

❖ உனக்குப் படிக்கத் தெரியாது என்னும் ஒற்றைவரிக் குரல், கருப்பின சமூகத்தின் பெண்குழந்தை மேரிஜேனை மிகவும் பாதித்தது.

❖ ஆசிரியர் மிஸ்.வில்சன் அவர்களின் அரவணைப்பு கருப்பின மக்களின் வீட்டிலிருந்து முதன்முறையாக மேரி ஜேன் படிக்கப் போகிறாள் என்ற நம்பிக்கையையும் அடுத்த தலைமுறையின் முதல் ஆளுமை அவள்தான் என்பதையும் இக்கதை விளக்குகிறது.

❖ பருத்திக் காட்டில், வேலையை முடித்து, பள்ளிக்கூடம் செல்லவேண்டும் என்ற ஆர்வமும், தந்தையின் அரவணைப்பும் அவளுக்குப் புதிய நம்பிக்கையைக் கொடுத்தது.

❖ தான் பெற்ற புதிய கல்வியினால், மேரிஜேன், புதிய ஒருத்தியாக மாறிவிட்டாள். பட்டமும் பெற்றாள்.

❖ அவள் உயர்கல்வி செல்லும்போது, ஊரே கூடி வழியனுப்பியது.

❖ கருப்பின மக்களுக்கு மறுக்கப்பட்ட கல்வியை மீட்டெடுத்த புதிய நம்பிக்கையின் உருவமே மேரிஜேன்.

## 5.பாய்ச்சல்

**சா. கந்தசாமி**

- ❖ உண்மையான கலைஞன், தன் கலையில் முழு ஈடுபாட்டைக் காட்டுவான்.
- ❖ தன் தனித்தன்மையை வெளிக்கொணர்வான்.
- ❖ தன் கலையைப் பின்பற்ற தகுந்த வாரிசு உருவாகிறபோது, அவன் மிகுந்த மகிழ்ச்சியடைவான் என்பதை விளக்குவதே இக்கதை.
- ❖ அழகு என்ற சிறுவன் அந்த அந்த ஊருக்குப் புதியவன்.
- ❖ தெருமுனையில் ஒலித்த மேளச்சத்தம் அவனை ஈர்த்தது.
- ❖ கூட்டத்தின் உள்ளே குனிந்து பார்த்தான்.
- ❖ அனுமார் வேடமிட்ட இளைஞனின் ஆட்டம் அவனை ஈர்த்தது.
- ❖ ஆடி முடித்த இளைஞன் வேடம் கலைத்தபோது, உங்களைப் போல எனக்கு ஆட ஆசைதான் என்றான்.
- ❖ ஏங்கே ஒரு ஆட்டம் போடு பார்க்கலாம் என்றான் அனுமன் கலைஞன்.
- ❖ அனுமன் வேடமிட்ட அழகு, கலைஞனை மிஞ்சும் அளவிற்கு, ஆடிய ஆட்டத்தைக் கண்டான்.
- ❖ தனக்கான வாரிசு உருவாகிவிட்டான் என மகிழ்ந்தான் அனுமன் கலைஞன

## 6.ஒருவன் இருக்கிறான்

**கு. அழகிரிசாமி**

- ❖ கல்மனதையும் கரையச் செய்யும் கதை ஒருவன் இருக்கிறான்.
- ❖ இதன் ஆசிரியர் கு. அழகிரிசாமி ஆவார்.
- ❖ குப்புசாமி என்பவன் உறவினர்களால் ஒதுக்கப்பட்டவன். இவனுக்கு வயது 25. வயிற்றுவலியால் வாடினான்.
- ❖ உறவினர்கள் தாய்மாமன், சித்தி அனைவரும் அவனை அநாதை போல நடத்தினர்.
- ❖ சென்னை அரசு மருத்துவமனையில் குப்புசாமி சேர்க்கப்பட்டான்.
- ❖ அதனை அறிந்த அவன் நண்பன் வீரப்பன், தனக்குத் தெரிந்த ஒருவரிடம் , மூன்று ரூபாய் பணத்தையும், உருக்கமான கடிதத்தையும் கொடுத்தனுப்பினான்.
- ❖ குப்புசாமி தங்கியிருந்த சித்தப்பா வீட்டின் பக்கத்து வீட்டுக்காரர், பலமுறை மனிதநேயமற்று குப்புசாமியிடம் நடந்திருக்கிறார்.
- ❖ குப்புசாமிக்கும் இரக்கம் காட்ட ஒருவன் இருக்கிறான் என்பதனை, வீரப்பன், கடன் வாங்கி கொடுத்தனுப்பிய மூன்றுரூபாய் பணம் , உருக்கமான கடிதம்

www.Padasalai.Net

மேலும், அதைக் கொடுக்கவந்தவர் தன்பங்கிற்கு ஒரு ரூபாய் மற்றும் சாத்துக்குடியை கொடுத்த செயலால் அறிந்துகொண்டார்.

- பக்கத்து வீட்டுக்காரர் மனமாற்றமடைந்தார்
- குப்புசாமியைப் பார்க்க நாமும் இன்று மருத்துவமனை செல்வோம் என்று கூறியவாறே, சாத்துக்குடி வாங்க கடைக்குச் சென்றார்.
- யாரும் அநாதை இல்லை: அன்பின் துணையில் மனிதம் துளிர்க்கிறது.

## 7.இராமானுசர்

- ✓ புனித திருமந்திர திருவருள் வேண்டி, பூரணரிடம் பதினெட்டுமுறை முயற்சி செய்த பிறகு, பூரணர் இராமானுசருக்கு மந்திர மறைபொருளை அருளினார்.
- ✓ இதை யாருக்கும் தெரிவிக்காமல், தியானம் செய்தால் பிறவித்துன்பம் நீங்கும் என்றார்.
- ✓ திருமந்திர மறைபொருளைப் பிறருக்குத் தெரிவித்தால், நரகம் கிட்டும் என்றார்.

  தான் நரகம் சென்றாலும் பரவாயில்லை என்று கூறினார்.
- ✓ தாமறிந்த அரிய திருமந்திரத்தை, எளிய மக்களுக்கு எடுத்துச்சொல்லி, கொள்கையில் உயர்ந்து நின்றார் இராமானுசர்.
- ✓ இந்தப் பரந்த உள்ளம், இதுவரை எனக்கு இல்லாமல் போனதே என உணர்ந்த பூரணர், தன் மகன் சௌமிய நாராயணனை இராமானுசரிடம் அடைக்கலமாக அனுப்பிவைத்தார்.

ஆக்கம்: முனைவர்.ரெ.ரமாதேவி , பட்டதாரி ஆசிரியர்(தமிழ்),அ.உ.ப,ஆவூர்.

Kindl send me your district Questions & Keys to email Id - Padasalai.net@gmail.com